# யூன் – 09 – பொதுக்கால 10ம் ஞாயிறு

## பரிசுத்த ஆவியானவர் பெருவிழா

## என் உயிரே! ஆண்டவரைப் போற்றிடு! திபா. 104:1

-----------------------------------------------------------------

### முதல் வாசகம் : திருத்தூதர் பணி 2 : 1 – 11

பெந்தக்கோஸ்து என்னும் நாள் வந்தபோது அவர்கள் எல்லாரும் ஒரே இடத்தில் கூடியிருந்தார்கள்.திடீரென்று கொடுங்காற்று வீசுவது போன்று ஓர் இரைச்சல் வானத்திலிருந்து உண்டாகி, அவர்கள் அமர்ந்திருந்த வீடு முழுவதும் ஒலித்தது.மேலும் நெருப்புப்போன்ற பிளவுற்ற நாவுகள் ஒவ்வொருவர் மேலும் வந்து அமர்ந்ததை அவர்கள் கண்டார்கள்.அவர்கள் அனைவரும் தூய ஆவியால் ஆட்கொள்ளப்பட்டனர். தூய ஆவியின் தூண்டுதலால் அவர்கள் ஒவ்வொருவரும் வெவ்வேறான மொழிகளில் பேசத் தொடங்கினார்கள். அப்பொழுது வானத்தின் கீழுள்ள அனைத்து நாடுகளிலுமிருந்தும் வந்திருந்த இறைப்பற்றுள்ள யூதமக்கள் எருசலேமில் தங்கியிருந்தனர்.அந்த ஒலியைக்கேட்டுக் கூடிய திரளான மக்களுள் ஒவ்வொருவரும் தம் சொந்த மொழிகளில் அவர்கள் பேசக்கேட்டுக் குழப்பமடைந்தனர்.எல்லோரும் மலைத்துப்போய், "இதோ பேசுகின்ற இவர்கள் அனைவரும் கலிலேயர் அல்லவா?அவ்வாறிருக்க நம்முடைய தாய்மொழிகளில் இவர்கள் பேசுவதை நாம் ஒவ்வொருவரும் கேட்பதெப்படி?" என வியந்தனர்.பார்த்தரும், மேதியரும், எலாமியரும், மெசப்பொத்தாமியா, யூதேயா, கப்பதோக்கியா, போந்து, ஆசியா ஆகிய நாடுகளில் வாழ்கின்றவர்களும்,பிரிகியா, பம்பிலியா, எகிப்து, சிரேன் நகரையடுத்த லிபியாவின் பகுதிகளில் வாழும் மக்களும் உரோமையிலிருந்து வந்து தங்கியிருந்தவர்களும், யூதரும் யூதம் தழுவியோரும் கிரேக்கரும், அரேபியரும் ஆகிய நாம் நம்மொழிகளிலே கடவுளின் மாபெரும் செயல்களை இவர்கள் பேசக்கேட்கிறோமே!"என்றனர்.

**பதில்பாடல் :** ஆண்டவரே! உம் ஆவியை அனுப்பி,
மண்ணகத்தின் முகத்தைப் புதுப்பிக்கின்றீர்.

### இரண்டாம் வாசகம் : 1 கொரிந்தியர் 12:3 - 7,12-13

சகோதர, சகோதரிகளே தூயஆவியால் ஆட்கொள்ளப்பட்டுப் பேசும் எவரும் "இயேசு சபிக்கப்பட்டவர்" எனச் சொல்லமாட்டார். தூய ஆவியால் ஆட்கொள்ளப்பட்டவரன்றி வேறு எவரும் "இயேசுவே ஆண்டவர்" எனச்சொல்ல முடியாது. இதை நீங்கள் தெரிந்து கொள்ள வேண்டும். அருள்கொடைகள் பலவகையுண்டு ஆனால் தூய ஆவியார் ஒருவரே.திருத்தொண்டுகளும் பலவகையுண்டு ஆனால் ஆண்டவர் ஒருவரே.செயல்பாடுகள் பலவகையுண்டு ஆனால் கடவுள் ஒருவரே. அவரே எல்லாரிடமும் எல்லாவற்றையும் செயல்படுத்துபவர்.பொது நன்மைக்காகவே தூய ஆவியாரின் செயல்பாடுகள் ஒவ்வொருவரிலும் வெளிப்படுகிறது. உடல் ஒன்றே. உறுப்புகள் பல. உடலின் உறுப்புகள் பலவாயினும் உடல் ஒன்றாயிருப்பதுபோல கிறிஸ்துவும் இருக்கிறார்.ஏனெனில், யூதரானாலும், கிரேக்கரானாலும், அடிமைகளானாலும்,உரிமைக் குடிமக்களானாலும் நாம் எல்லாரும் ஒரே தூய ஆவியால் ஒரே உடலாய் இருக்கும்படி திருமுழுக்குப் பெற்றோம். அந்த ஒரே ஆவியையே பானமாகவும் பெற்றோம்.

### நற்செய்தி : யோவான்20 : 19 - 23
### (நற்செய்தி மாறுபடலாம் யோவான் 14 : 15 – 16, 23 - 26)

அன்று வாரத்தின் முதல் நாள். அது மாலை வேளை. யூதர்களுக்கு அஞ்சிச் சீடர்கள் தாங்கள் இருந்த இடத்தின் கதவுகளை மூடிவைத்திருந்தார்கள். அப்போது இயேசு அங்கு வந்து அவர்கள் நடுவில் நின்று, "உங்களுக்கு அமைதி உரித்தாகுக!" என்று வாழ்த்தினார்.இவ்வாறு சொல்லிய பின் அவர் தம் கைகளையும் விலாவையும் அவர்களிடம் காட்டினார். ஆண்டவரைக் கண்டதால் சீடர்கள் மகிழ்ச்சி கொண்டார்கள்.இயேசு மீண்டும் அவர்களை நோக்கி, "உங்களுக்கு அமைதி உரித்தாகுக! தந்தை என்னை அனுப்பியது போல நானும் உங்களை அனுப்புகிறேன்" என்றார்.இதைச் சொன்ன பின் அவர் அவர்கள்மேல் ஊதி, "தூய ஆவியைப் பெற்றுக் கொள்ளுங்கள். எவருடைய பாவங்களை நீங்கள் மன்னிப்பீர்களோ, அவை மன்னிக்கப்படும். எவருடைய பாவங்களை மன்னியாதிருப்பீர்களோ, அவை மன்னிக்கப்படா" என்றார்.

**தியானம்:** பெந்தகோஸ்தே என்றால் ஐம்பதாம் நாள் என்று பொருள். பெந்தகோஸ்தே திருவிழா என்பது நன்றியின் பெருவிழாவாக யூத மக்களால் கொண்டாடப்பட்டது. நன்றியின் பொருவிழாவின் போது துதித்துக் கொண்டிருந்த சீடர்கள் மீது தூய ஆவியானவர் பொழியப்பட்டார். எதிர்காலத்தைக் குறித்த பயம், யூதத்தலைவர்களைக் குறித்த அச்சம் சீடர்களை நான்கு சுவற்றுக்குள் முடக்கிப் போட்டது. சீடர்களின் வாழ்விலும் எரிக்கோ மதில்கள் சூழ்ந்து கொண்டதை உணர்ந்தார்கள். எரிக்கோ மதில்கள் என்பது பழைய ஏற்பாட்டில் வாக்களிக்கப்பட்ட பாலும் தேனும் பொழியும் கானான் தேசத்திற்குள் நுழைய முடியாதபடி தடுத்து நின்ற தடுப்புச் சுவர். அந்த பெரிய மதில் சுவரை தகர்த்து அதற்குள்ளிருந்த அரக்கர்கள் போல் இருந்த இருளின் சக்திகளை அழிப்பதற்கு இஸ்ராயேல் மக்களுக்குக் கடவுள் கற்றுக்கொடுத்த பாடம் உங்கள் எக்காளங்களை சத்தமாக ஊதுங்கள் என்பது (யோசு.6:10). ஆண்டவரின் பிரசன்னத்தைச் சுமந்து புகழ்ச்சியினால் இஸ்ராயேல் மக்கள் தங்கள் வாழ்வை நிரப்பியபோது அவர்களைத் தடுத்து நிறுத்திய எரிக்கோ மதில்கள் உடைந்து சுக்குநூறாகியது. இஸ்ராயேல் மக்களும் வாக்களிக்கப்பட்ட கானான் தேசத்தை சொந்தமாக்கிக் கொண்டார்கள். அதுபோல சீடர்கள் இறைவனை புகழ்ந்து துதித்த போது அவர்களது உள்ளத்தை துக்கத்தால், அச்சத்தால் மறைத்திருந்த எரிக்கோ மதில்கள் உடைக்கப்பட்டன, அவர்களுக்காக ஆண்டவர் இயேசு ஏற்பாடு செய்திருந்த தூய ஆவியானவரைப் பெற்றுக் கொண்டார்கள். கடவுளின் அபிஷேகத்தை பெற்று கிறிஸ்துவின் சாட்சிகளாய் மாறினார்கள். தூய ஆவியானவர் இல்லாமல் ஆண்டவர் இயேசுவுக்கு அவர்களால் சான்று பகரமுடியாது என்று அறிந்த இயேசு, “இதோ என் தந்தை வாக்களித்த வல்லமையை நான் உங்களுக்கு அனுப்புகின்றேன். நீங்கள் உன்னதத்திலிருந்து வரும் அவ்வல்லமையால் ஆட்கொள்ளப்படும் வரை இந்நகரத்திலேயே இருங்கள்'' (லூக்.24:49) என்று உயிர்த்த ஆண்டவர் தனது சீடருக்கு கட்டளையாகக் கொடுத்தார். ஆண்டவரோடு மூன்று ஆண்டுகள் பயணித்த சீடர்கள் இயேசுவை அறிந்திருந்தார்கள். ஆனால் அவர்கள் இயேசுவை அனுபவிக்கவில்லை அதனால் அவரை இறைமகன் என்று நம்பவுமில்லை. எனவேதான் இயேசுவின் பாடுகளின் நேரத்தில் அவர்களால் அவரோடு பயணிக்க முடியவில்லை, ஆண்டவர் இயேசு உயிர்த்தெழுந்த பிறகும்கூட அவரை நம்ப முடியாமல் தவித்தார்கள். ஆனால் அதற்கு மாறாக ஆவியானவரால் நிரப்பப்பட்ட அன்னை மரியாள் ஆண்டவர் இயேசுவை இறுதிவரை பின்பற்றினார், இயேசு உயிர்த்த பிறகு சீடர்களை ஒன்று சேர்த்து ஜெபிக்க வைத்தார். ஆகவே நமது புத்தியினால் ஆண்டவர் இயேசுவை அறிவதாலோ, அற்புதங்களை பார்ப்பதாலே நம்முடைய வாழ்வு மாறப்போவதில்லை, உயிர்த்த ஆண்டவருக்கு சான்று பகரப்போவதில்லை மாறாக, உயிர்த்த இயேசுவை உணர்வுப்பூர்வமாக அனுபவிக்க வேண்டும். அவ்வாறு அனுபவிக்க தூய ஆவியானவருடைய ஆற்றல் வேண்டும்.